**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.100/2014**

தேதி . 27.09.2021

பெயர் . இந்திரா பிரியதர்ஷ்னி

க/பெ . முரளிகிருஜ்ணன்

வயது . 32

வா.சா. 2

**குறுக்கு விசாரணை**

1ம் வாதி யார் என்றால் என்னுடைய அம்மா. 2ம் வாதி யார் என்றால் தாய் மாமா. 1, 2 வாதிக்காக தான் நான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான் வழக்கின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு பி அட்டவணை சொத்து அ அட்டவணை சொத்துடன் சேர்ந்தது என்றால் சரிதான். அ அட்டவணை சொத்து சர்வே எண் 140/3ல் 10 செண்ட் என்றால் சரிதான். சர்வே எண் 140/3 மொத்த விஸ்திரணம் என்ன என்றால் 38 ஏர்ஸ். அ அட்டவணை சொத்து 10 செண்ட் 38 ஏர்ஸ்க்குள் அடங்கியது என்றால் சரிதான். சர்வே எண் 140/3ல் 38 ஏர்ஸ் யார் பெயரில் உள்ளது என்றால் 1ம் வாதி பெயரில் உள்ளது. 1ம் வாதி பெயரில் 38 ஏர்ஸ் உள்ளது நான் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 140/3ற்கு மொத்த விஸ்திரணம் கேட்காமல் அ அட்டவணை சொத்திற்கு விளம்புகை பரிகாரம் கேட்டதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மேற்கு பக்கத்தில் தான் 1, 2 பிரதிவாதிகள் வீடு உள்ளது என்பதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி அட்டவணை சொத்தின் மேற்கு பக்கத்தில் 1, 2 பிரதிவாதிக்ளுக்கு சொந்தமான வீடு இல்லை சர்வே எண் 140/4இ வேறு 4 பேர் பெயரில் உள்ளது என்றால் வீடு மனை யார் பெயரிலும் இல்லை. சர்வே எண் 140/3 ற்கு மேல் 140/4இ தான் உள்ளது என்றால் 1, 2 பிரதிவாதிகளின் வீடு தான் உள்ளது. என் வீட்டிற்கு மேல் 1 2ம் பிரதிவாதிகள் கிடையாது சர்வே எண் 140/4இ ல் 4 பேர் பெயரில் உள்ளது அவர்களை தரப்பினராக சேர்ககாமல் இந்த வழக்கு நிலைக்கத்க்கதல்ல என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் பி அட்டவணை சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம்

பிரதிவாதி BDO அலுவலகத்தில் பசுமை வீட்டிற்கு உத்தரவு வாங்கினார் என்பதற்கான ஆதாரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் வழக்கறிஞரிடம் கொடுத்தேன் அவர் தாக்கல் செய்தாரா என்று தெரியாது. என் அம்மா தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. என் அம்மாவுக்கு எப்போது திருணம் நடந்தது என்றால் 34 வருடம். எந்த ஊரில் கொடுத்தார்கள் என்றால் குமரகுண்டா. என் அம்மா திருமண ஆன பிறகு எங்கு இருந்தார் என்றால் சென்னையில் இருந்து பிறகு தற்போது சூரியநகர் கஜலட்சுமி கிராமத்தில் இருக்கிறார். என் அம்மா அங்கு தான் இருக்கிறார் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**